பக்கங்கள் 17 + 08

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## அமைச்சர் ஜீவனை உடன் கைது செய்க!

**நீதிமன்றம் அதிரடி உத்தரவு**



(ஆ.ரமேஸ்)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும்

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 06 திங்கட்கிழமை 22.07.2024 அதிர்வு 357







### தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்குவதற்கான

# தமிழ்த் தேசியப் பேரவையின் புரிந்துணர்வு உடன்படிக்கை


### யாழ்ப்பாணத்தில் இன்று நண்பகல் கைச்சாத்து

(எஸ்.நிதர்ஷன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற நோக்கில் தமிழ்த் தேசியப் பேரவையின் புரிந்துணர்வு உடன்படிக்கை இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அருகிலுள்ள தந்தை செல்வா கலை யரங்கில் இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

02







# ஹிருணிகா பிணையில் விடுவிப்பு!

மூன்று வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவைப் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரண ராஜா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி கொழும்பு – தெமட்ட கொடைப் பகுதியில் கடையொன்றில் பணிபுரிந்த அமில பிரியங்க என்ற இளைஞரைக் கடத்திச் சென்று தாக்கியமை உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுக் களில் ஹிருணிகாவைக் குற்ற

04









# தமிழ்த் தேசியப் பேரவையின் புரிந்துணர்வு உடன்படிக்கை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய கொள்கை சார்ந்து இயங்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ்த் தேசி யக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும், சி.வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, பொ.ஐங்கரநேசனின் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகிய கட்சிகளும், தமிழ்ப் பொது அமைப்புகளின் கூட்டான தமிழ் மக்கள் பொதுச் சபையும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

தமிழ்த் தேசிய பேரவை உருவாக்குவது தொடர்பான இணக்கம் முன்னரே எட்டப்பட்டிருந்தது. இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 6ஆம் திகதி மேற்கொள்வது என்று தீர்மானிகப்பட்டிருந்தது. ஆனால், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் காலமானதைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் பிற்போடப்பட்டது.











# மன்னாரில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் போராட்டம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டம், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை மற்றும் அந்தோனி யார் புரம் கிராமங்களைச் சேர்ந்த ஏழை விவசாயிகள் தமக்கான காணி உரிமை கோரி இன்று மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அடையாள கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மாந்தை மேற்கு பகுதியில் உள்ள சோழ மண்டலம் குளத்தின் கீழ் 30 வருடங்களுக்கு மேலாக அரச அனுமதியுடன் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த அந்தோனியார்புரத்தைச் சேர்ந்த மக்களுக்கு நபருக்கு தலா 2 ஏக்கர் காணி வீதம் வழங்குவதாகவும், அதன் ஊடக வாழ்வார செயற்பாடுகளை முன்னெடுக்க உதவுவதாகவும் அரசால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வாக்குறுதியை அடிப்படையாகக் கொண்டு மக்கள் எந்தவொரு காணி ஆவணங்கள் இன்றி பல வருடங்களாக அப்பகுதியில் வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

இவ்வாறான நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு குறித்த காணிகளை அந்தோனியார்புரம் மக்களுக்கு வழங்காது வெளிநாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் உள்ளடங்கலாக மன்னார் மாவட்டத்தைச் சேராத வவுனியா மற்றும் கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த செல்வந்தர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த நபர்களால் காணிகளைப் பண்படுத்தும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு



வருகின்றது.

இந்தநிலையில் தங்களுக்குச் சொந்தமான காணியைத் தாங்கள் பூர்வீகமாகப் பயன்படுத்திய காணியைத் தங்களுக்கு வழங்காது வெளிநாட்டைச் சேர்ந்த நபர்களிடமும், பணம் படைத்தவர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவினர் அவர்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் குறித்த போராட்டம் இன்று காலை இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், இந்த நாட்டில் ஏழைகளுக்கு நீதியே இல்லையா ?, அரச அதிகாரிகளே காணி மாபியாக்களின் கூட்டாளிகளா? அரச அதிகாரிகளே துரோகத்துக்குத் துணை போகாதீர்கள், தமிழ் அரசியல்வாதிகளே ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றீர்களா? போன்ற பல்வேறு வாசகங்களை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தின் இறுதியில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரனிடம் போராட்டக்காரர்கள் கையளித்த நிலையில், இவ்வாறு காணி தொடர்பான பிணக்குகளை நீண்ட நாட்கள் முடிவுத்தாமல் வைத்திருக்க முடியாது எனவும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பலருக்குக் காணி இல்லாத நிலையில் வேறு மாவட்டத்தையும் வெளிநாட்டையும் சேர்ந்தவர்களுக்குக் காணி வழங்குவதை ஏற்க முடியாது எனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

மேலும் இன்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு குறித்த காணி விடயம் தொடர்பாக மாவட்ட செயலகம் சார்பாக அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கவுள்ளதாகவும், இன்றைய போராட்டம் தொடர்பான ஆவணங்களையும் அறிக்கையுடன் சமர்ப்பித்து விரைவில் குறித்த பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான ஒரு முடிவைப் பெற்றுத்தருவதாகவும் அரச அதிபர் உறுதியளித்தார்.

















யாழ். வடமராட்சி, அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது...

# நுவரெலியா விடுதியில் இளைஞரின் சடலம் மீட்பு!

**(நுவரெலியா நிருபர்)**

நுவரெலியா கூட்டுறவுத் தங்குமிடம் விடுதியில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

பனாபிட்டிய, கரந்தெனிய பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் தங்குமிடத்துக்கு வந்திருந்த மேற்படி இளைஞர், அந்த இடத்தை விட்டு இன்று காலை வெளியேறுவதாக விடுதி நிர்வாகத்துக்குத் தெரிவித்திருந்தார்.

எனினும், இன்று காலை வரை அவர் வெளியே வராத காரணத்தால்



சந்தேகம் ஏற்பட்டு அறையின் ஜன்னல் பகுதியில் இருந்து ஆய்வு செய்தபோது, சம்பந்தப்பட்டவர் தரையில் வீழ்ந்து கிடப்பதைப் பார்த்த ஊழியர் ஒருவர் இது குறித்து நுவரெலியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், மேற்படி நபர் தங்கியிருந்த அறையின் கதவை உடைத்துக்கொண்டு உள்நுழைந்தனர்.

இதனைத் தொடர்ந்து 1990 நோயாளர் அம்புலன்ஸ் சேவைக்குப் பொலிஸார் அழைப்பு விடுத்தனர். சம்பவ இடத் துக்கு விரைந்த அம்புலன்ஸ் சேவையினர், கீழே வீழ்ந்து கிடந்த நபரைப் பரிசோதனை செய்து அவர் உயிரிழந்தமையை உறுதிப்படுத்தினர்.

தொடர்ந்து பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துவிட்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான ஜீவன் தொண்டமானைக் கைது செய்து நீதிமன்றத்தால் ஆஜர்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

களனிவெளி பெருந்தோட்டத்துக்குட்பட்ட பீட்ரு தேயிலைத் தொழிற்சாலைக்குள் அத்துமீறி நுழைந்த சம்பவம் தொடர்பில் தொடரப்பட்ட வழக்கில் ஆஜராகாத அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் ஏனையவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

களனிவெளி பெருந்தோட்டத்துக்குட்பட்ட பீட்ரு தேயிலைத் தொழிற்சாலைக்குள் கடந்த மே மாதம் 30 ஆம் திகதி அத்துமீறி நுழைந்தார் எனக் கூறி அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட அவரது சகாக்களுக்கு எதிராக களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்தால் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையிட்டு இன்று நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நீதிபதி ஜயமினி அம்பகஹவத்தவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பாக களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்துக்குச் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, சட்டத்தரணி பாலித சுபசிங்க மற்றும் சட்டத்தரணி சுரேஷ் கயான் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

இந்த வழக்கின் பிரதான சந்தேகநபரான நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் அவர் சார்ந்த ஏனையவர்களுக்கு இன்று வழக்கு தொடர்பான விசாரணைக்கு வருகை தரும்படி நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இன்று குறித்த வழக்குக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் வருகை தரவில்லை என்பதால் இது தொடர்பான மேலதிக தகவல்களை நுவரெலியா பொலிஸாரால் நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்ததையடுத்து தகவல்களைப் பரிசீலனை செய்த நீதிபதி ஜயமினி அம்பகஹவத்த வழக்கின் பிரதான சந்தேகநபரான அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் ஏனையவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலையாக்கும்படி உத்தரவிட்டார்.

## ஹிருணிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாளி என நிரூபித்திருந்த கொழும்பு மேல் நீதிமன்றம், 3 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்திருந்தது.

இந்நிலையில், தனக்கு எதிரான சிறைத் தண்டனைக்கு எதிராக ஹிருணிகா பிரேமச்சந்திர மேன்முறையீடு செய்திருந்தார். இதனால் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணிகள் முன்வைத்த பிணைக் கோரிக்கைக்கு அமைய அவர் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
தென்றல் FM
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நவம்பரில் தெரியும் முடிவு

எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னிரவில் சமூக வலைத்தளம் மூலம் அறிவித்துள்ளார்.

தனது கட்சி மற்றும் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு தான் இந்த முடிவை எடுத்துள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும், 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனது தற்போதைய பதவிக்காலம் முடிவடையும் வரை ஜனாதிபதியாகத் தனது பொறுப்பில் தாம் பணியாற்றுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

“உங்கள் ஜனாதிபதியாக பணியாற்றுவது எனது வாழ்நாளின் மிகப்பெரிய கௌரவம். மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது எனது நோக்கமாக இருந்தாலும், கட்சி மற்றும் நாட்டின் நலன் கருதி, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலக முடிவுசெய்துள்ளேன். எஞ்சியிருக்கும் எனது பதவிக் காலத்திற்கான பொறுப்புகளை நிறைவேற்ற முடியும் என நான் நம்புகிறேன்” என ஜோ பைடன் தனது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, ஜனாதிபதி தேர்தலில் இருந்து விலகியுள்ள ஜோ பைடன் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க முன்மொழிந்துள்ளார். இதன்படி, விரைவில் கமலா ஹாரிஸ் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆயினும் அது இன்னும் உறுதியாகவில்லை.

இதற்கிடையில் - ஜோ பைடனின் இந்தக் காலம் தாழ்த்திய முடிவை அவரை எதிர்த்து இந்தத் தேர்தலில் போட்டியிடத் தயாராகியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் காட்டமாகச் சாடியுள்ளார்.

இந்தத் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகிறார். இதே போன்று, ஜனநாயகக் கட்சி வேட்பாளராக போட்டியிடும் முடிவுடன் தற்போதைய ஜனாதிபதி பைடன் களம் இறங்கினார்.

ஆனால், வயது முதிர்வு, டிரம்புடனான விவாதத்தின்போது திணறல் உள்ளிட்ட சர்ச்சைகளால் கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. கட்சியினரின் அதிருப்தி அதிகரித்த நிலையில், அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து விலகும் முடிவை எடுத்த பைடன், அதற்கான அறிவிப்பையும் நேற்று வெளியிட்டார்.

ஜோ பைடனை சுற்றியிருக்கும் அனைவருக்கும், பைடன் அதிபராக இருப்பதற்கோ அல்லது அதிபர் தேர்தலில் போட்டியிடவோ தகுதியில்லாதவர் என முன்கூட்டியே நன்றாகத் தெரியும் என டிரம்ப் கூறியுள்ளார்.

“ஜோ பைடன், அதிபர் தேர்தலில் போட்டியிட திறனில்லாத நபர். அவர் ஒருபோதும் அதிபராக ஆகியிருக்க கூடாது. மக்களுக்கு சேவையாற்ற அவர் சரியான ஆள் கிடையாது. நம்முடைய நாட்டை அவர் அழித்து கொண்டிருக்கிறார்” என்றும் டரம்ப் சீறியிருக்கின்றார்.

“மோசடிப் பேர்வழியான பைடனுக்கு எதிராக நாம் செலவிட்ட நேரம், பணம் எல்லாம் வீணாகி விட்டன. தேர்தல் விவாதத்தில் பங்கேற்று விட்டு, போட்டியில் இருந்து வாபஸ் பெற்று விட்டார். இதனால், நாம் மீண்டும் முதலில் இருந்து தொடங்க வேண்டும். இத்துடன் இது முடியவில்லை. போட்டியிடவில்லை என்று அவர் இன்று கூறிய விடயங்களை, நாளை தூங்கி எழுந்திருக்கும்போது மறந்து விடுவார். பைடனுக்கு கொரோனா தொற்றே கிடையாது. அவர் ஜனநாயகத்துக்கு ஓர் அச்சுறுத்தல்” என்றும் டிரம்ப் சமூக ஊடக பதிவில் தெரிவித்து உள்ளார்.

பைடன் போட்டியிடும் முடிவில் இருந்து விலகிய சூழலில், மீண்டும் முதலில் இருந்து டிரம்ப் தேர்தல் பணியாற்ற வேண்டும். கமலா ஹாரிஸ், அவர் சார்ந்த ஜனநாயக கட்சியால் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டு உள்ள சூழலில், அவரை எதிர்கொள்ளும் வகையில், டிரம்ப் பிரசாரத்திற்குத் தயாராக வேண்டிய சூழல் உள்ளது.

2016 ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதியாக ஹிலாரி கிளிண்டன் தெரிவாகும் வாய்ப்பை டொனால்ட் டிரம்ப் முறியடித்தார். இப்போது மீண்டும் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக மற்றொரு பெண் மணியான கமலா ஹாரிஸ் முதல் பெண் ஜனாதிபதியாகும் கனவுடன் களம் இறங்கும் சூழல் வந்துள்ளது. அதையும் ட்ரம்ப் முறியடிப்பாரா அல்லது கடந்த தேர்தலில் பைடனிடம் படித்த பாடத்தை மீண்டும் எதிர் கொள்வாரா? நவம்பரில் தெரியும் முடிவு.





# உகந்த முருகன் ஆலய சமுத்திர தீர்த்தோற்சவம் இன்று

(வடிவேல் டினேஸ்)

வரலாற்று சிறப்பு மிக்க உகந்த முருகன் ஆலயத்தின் சமுத்திர தீர்த்தோற்சவம் இன்று (22) காலை இடம் பெற்றது.

இதன்போது நாடெங்கிலும் உள்ள முருக பக்தர்கள் கலந்து கொண்டனர். தன்னார்வ தொண்டு அமைப்புக்களும் சேவையில் ஈடுபட்டன.

கிரியைகள் அனைத்தும் சித்தாந்த ஞான பாணு ஆகம பிரவீணா சிவஶ்ரீ க. கு. சீதா ராம் குருக்கள் தலைமையில் நிகழ்த்தப்பட்டது.







# மாவடி கந்தசுவாமி ஆலய தீர்த்தோற்சவம்

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு மாவடி ஸ்ரீ கந்த சுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மஹோற்சவ தீர்த்தோற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

கடந்த 06 ஆம் தேதி கொடியேற்றத் துடன் தொடங்கிய திருவிழா தினமும் பகல் இரவு திருவிழாவாக வசந்த மண்டப பூஜையும் சுவாமி உள்வீதி வெளிவீதி வருதலும் இடம்பெற்று வந்தது.

இன்று முருகப் பெருமான் காவடி சகிதம் ஊர்வலமாக வந்து சமுத்திர தீர்த்தம் இடம் பெற்றது.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட இயன் மருத்துவப் பிரிவுக்கான கட்டடத் தொகுதி திறப்பு!

(றியாஸ் ஆதம்)

சுகாதார அமைச்சின் 124 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட இயன் மருத்துவ பிரிவு கட்டடத் தொகுதி நேற்று (21) உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அழைப்பின் பேரில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இயன் மருத்துவ பிரிவுக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுகாதார முன்னாள் ராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் என்.சிவலிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டீ.ஜி. எம்.கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் உள்ளிட்ட வைத்தியர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சுகாதார முன்னாள் ராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிமின் முயற்சியால் இந்த இயன் மருத்துவ பிரிவு கட்டடத் தொகுதி நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# நினைவுப் பேருரையும் பரிசளிப்பும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் நினைவு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்தால் நடத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூரின் “கறை படியாச் சேவைகள்” எனும் தலைப்பில் இடம்பெற்ற நினைவு தின கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் எதிர்வரும் (25) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷனின் அனுசரணையில், சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக் கலந்து கொள்வார்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் பற்றிய நினைவுப் பேருரையை முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஏ.அப்துல் கபூர் ஆற்றுவார்.

இதன்போது கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர். மன்சூரின் அவரது மறுமை ஈடேற்றத்துக்காக துஆப் பிரார்த்தனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




# நற்பிட்டிமுனையில் இலவச மருத்துவ முகாம்

(பாறுக் ஷிஹான் )

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிய சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நற்பிட்டிமுனை அல்-அக்ஸா  மத்திய மகா வித்தியாலய அஹமட் மண்டப கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) இடம் பெற்றது.

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் (தலைவர் ஐ.எல்.ஏ.குத்தூஸ் தலைமையில் நடைபெற்ற  இலவச மருத்துவ முகாமில் தொற்றா நோய்களான நீரிழிவு, புற்றுநோய், மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் இடம் பெற்றன.

இன்று எமது சமூகத்தில் தொற்றா நோய்களான நீரிழிவு, புற்றுநோய், மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் போன்றன இளம் வயதிலேயே பொதுமக்களை கொல்லும் நோய்களாக காணப்படுகின்றன. ஆகவே ஆரம்பத்திலேயே இந்த நோய்களைக் கண்டுபிடிப்பதன் மூலமாக இந்த நோய்களின் அகோர தன்மையை சமூகத்தில் களையக் கூடியதாக இருக்கும்.

அதன் அடிப்படையில் இந்த இலவச மருத்துவ முகாமில் இரத்தத்தில் சீனி , இரத்த அழுத்தம் உடல் நிறை குறியீட்டெண்  மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன. வைத்திய அதிகாரிகளான டாக்டர் எஸ்.அஜ்மல் இம்தியாஸ், டாக்டர் எம்.ஏ.பயாஸ், சுகாதாரப் பிரிவின்  பொது சுகாதார பரிசோதகர் எம். நிஜாமுதின் அத்துடன் குடும்ப சுகாதார உத்தியகத்தர்களான ரி.எஸ்.சாஹிரா எஸ்.ஜீவானந்தி ஆகியோரின் பங்கு பற்றுதலுடன் நடைபெற்றது.

இலவச மருத்துவ முகாமில் பிரதேசத்திலுள்ள பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.













# உலக குருதி கொடையாளர் தினத்தில் குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலககுருதிகொடையாளர்தினத்தை சிறப்பிக்கும் வகையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை யின் ஏற்பாட்டில் இரத்த தானம் வழங்கிய வர்களுக்கான கௌரவிப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை (21) கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை யில் இடம்பெற்றது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஏ.எல்.எப்.ரஹ்மானின் வழி காட்டலில் இடம் பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக, கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பொதுச் சுகாதாரம் மற்றும் திட்டமிட லுக்கு பொறுப்பான சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.பாறூக் கலந்து கொண்டார்.

குருதிக்கொடை ஏற்பாட்டாளர்கள் சார்பில் கௌரவ அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம் பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாள ரும் மயோன் குரூப் நிறுவனத்தின் பணிப்பாளருமான றிஸ்லி முஸ்தபா கலந்து கொண்டார்.

வைத்தியசாலையின் வைத்தியர் கள், தாதியர்கள், குருதி நன்கொடை யாளர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு குருதிக் கொடையாளர்கள் பலர் அதிதிகளால் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட னர்.



# குடிதண்ணீர் திட்டம் ஆரம்பம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

குருணாகல் லங்கா டீப் வேல் நிறுவ னத்தின் ஊடாக நுவரெலியா கல்வி வலயத் துக்கு உட்பட்ட கஸ்ட பிரதேச பாடசாலை யான தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு இலவசமாக குடி தண்ணீர் வழங்கும் திட்டம் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் தலைமையில்இன்று (22) ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.








# கிழக்கு அபிவிருத்திக்கு 2 கோடி ரூபா நிதி வடமேல் மாகாண ஆளுநரால் ஒதுக்கீடு!

(எம்.எம்.ஜெஸ்மின்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கு வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

கோறளைப்பற்று மத்தி, வாழைச் சேனை பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் சமூக மட்ட அமைப்புக் கள், விளையாட்டுக் கழகங்கள், பள்ளி வாசல்கள் போன்றவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்டவர்க ளுக்கான கடிதங்களை கையளிக்கும் நிகழ்வு வடமேல் மாகாண ஆளுநரின் கல்குடா இணைப்பாளர் எம்.ஜவாத் தலைமையில் பிரதேச செயலக கேட் போர் கூடத்தில் பிரதித்திட்டமிடல் பணிப் பாளர் எச்.எம்.றுவைத் நெறிப்படுத்த லில் இடம்பெற்றது.




இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தின ராக வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் ஏறாவூர் இணைப்புச் செய லாளரும் ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளருமான அல்ஹாஜ் தஸ்லீம், ஜனநாயக ஐக்கிய முன்னணி யின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் முன்னாள் கோறளைப்பற்று வாழைச் சேனை பிரதேச சபை உறுப்பினர் எம். பி.எம்.தையூப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஒரு கோடி 82 லட்சம் ரூபா கோறளைப் பற்று மத்தி, வாழைச்சேனை பிர தேச செயலாளர் பிரிவுக்கும், 15 லட்சம் ரூபா கோறளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்கும் 39 லட்சம் ரூபா கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக் கும் முதலாம் கட்ட நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு கட்டங்களாக நிதி ஒதுக்கீடுகள் இடம்பெறவுள்ளன என்று வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட்டின் கல்குடா இணைப்ப ாளர் எம்.ஜவாத் தெரிவித்தார்.





# அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரியில் பயிலுனர் ஆசிரியர்களுக்கான வரவேற்பு



(எம் எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசியக் கல்வி யற் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டுக் கான பயிலுனர் ஆசிரியர்களை வர வேற்கும் நிகழ்வு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அதன் அதிபர் சட்டத்தரணி கே. புன்னிய மூர்த்தி தலைமையில் இன்று (22) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உப பீடாதிபதி எம். சி.ஜுனைட் வரவேற்பு நிகழ்த்தினார். இங்கு தெரிவு செய்யப்பட்ட ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏனைய துறைசார்ந்த பயிலுனர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் அதிபர், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் தேசியக் கல்வியற் கட்டுறு பயிலு னர் ஆசிரியர்கள், பெற்றார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக கட்டடம் உத்தியோகபூர்வமாகத் திறப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம், ஏ.எல்.றியாஸ்)**

ஷகல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகக் கட்டிடம் ஞாயிற்றுக் கிழமை (21) உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

கல்முனை தெற்கு சுகாதார வைத் திய அதிகாரி டாக்டர் திருமதி சராப்டீன் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்ட மான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சுகாதார முன்னாள் ராஜாங்க அமைச்சரும், நாடாளு மன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் என்.சிவ லிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டீ.ஜி. எம்.கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், மலேரியா தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.நௌஷாட் உள்ளிட்ட வைத்தியர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# அமரர் சௌந்தரம்மா ஞாபகார்த்த கிண்ணத்தை சுவீகரித்த கல்முனை வடக்கு விளையாட்டு கழகம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் அமரர் சௌந்தரம்மா ஞாபகார்த்தமாக 18 ஓவர் கொண்ட கடின பந்து சுற்றுப் போட்டியானது கழகத்தின் தலைவர் வீ.தயாபரன் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை (19)இடம்பெற்றது.

இந்தப் போட்டிக்குப் பிரதம அதிதியாக பொறியியலாளர் தம்பிபிள்ளை உருத்திரனும் சிறப்பு அதிதியாக ஆறுமுகம் தவராசாவும் கௌரவ அதிதிகளாக கே. தட்சணாமூர்த்தி , லயன் எஸ். நேசராசா மு.ரமணிதரன், கோ. உமாரமணன், ம. குமுதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்தப் போட்டியில் விவேகானந்தா விளையாட்டு கழகமும் கல்முனை வடக்கு விளையாட்டு கழகமும் மோதின.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற விவேகானந்தா விளையாட்டுக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 18 ஓவர்களுக்கு 139 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்முனை விளையாட்டு கழக அணியினர் 18 ஓவர்கள் நிறைவில் 140 ஓட்டங்களைப் பெற்று ஐந்து விக்கெட்டுகளால் விவேகானந்தா விளையாட்டு கழக அணியினரை வீழ்த்தி சௌந்தரம்மா ஞாபகார்த்த கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இந்தப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதை 54 ஓட்டங்களைப் பெற்ற அணியின் தலைவர் ரமேஷ்யும் சிறந்த பந்துவீச்சாளருக்கான விருதை மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்திய உமாகரனும் பெற்றுக் கொண்டார்.

# கதிர்காம தங்க நுழைவாயில் மஹிந்தவால் திறந்து வைப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

கதிர்காமத்தில் மாணிக்க கங்கைநதி தீர்த்தத்தில் அழகாக நிர்மாணிக்கப்பட்ட தங்க நுழைவாயில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தங்க நுழைவாயில் படிக்கட்டுகளில் கண் கவர் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

வரலாற்றில் முதல் தடவையாக பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தங்கநுழைவாயில் ஊடாகச் சென்று இன்று (22) திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெற்றது.

இதற்காக லட்சோப லட்சம் மக்கள் அங்கு ஒன்றுகூடியிருந்தனர். மக்கள் வெள்ளம் அங்கு அலைமோதியது.

கதிர்காம தேவாலய நிலமே திஷான் குணசேகர தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மிகவும் அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நுழைவாயிலூடாக யானைகள் சகிதம் பேழை எடுத்து செல்லப்பட்டு தீர்த்தோற்சவம் இடம் பெற்றது.




# நான்காவது சம்பியன் பட்டம்; எல்.பி.எல்லில் சாதித்தது ஜப்னா கிங்ஸ்

எல்.பி.எல். (லங்கா பிரீமியர் லீக்) இருபது-20 தொடரின் நடப்புப் பருவ கால சம்பியனாக ஜப்னா கிங்ஸ் தெரிவானது. இதன்மூலம் நான்காவது தடவையாகவும் சம்பியனாகியுள்ளது.

எல்.பி.எல். தொடரின் இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் காலி மார்வல்ஸ் அணியை எதிர்த்து ஜப்னா கிங்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காலி அணி, பானுக ராஜபக்ஷ (82), ரிம் செய்பெட் (47) ஆகியோரின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க, 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 184 ஓட்டங்களைச் சேர்த்தது.

ஜப்னா கிங்ஸ் சார்பாக பந்துவீச்சில், அசித பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளையும் ஜசோன் 2 விக்கெட்டுகளையும் ஓமார்சை ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 185 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய ஜப்னா அணி, முதல் பந்திலேயேயே பதும் நிசங்கவை இழந்தது.

பின்னர் இணைந்த குசல் மெண்டிஸ் (72), ரிலீ ரொசௌவ் (106) ஆகியோர் ஆட்டமிழக்காமல் அதிரடியாக ஆடினர். இறுதியில் ஜப்னா அணி, 15.4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 185 ஓட்டங்களைச் சேர்த்து 9 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தின் நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் ஜப்னா அணியின் ரிலீ ரொசௌவ் தெரிவானார்.

2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எல்.பி.எல். தொடரிலேயே சம்பியனான ஜப்னா அணி, தொடர்ந்து 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளிலும் வெற்றி பெற்று ஹெட்ரிக் சம்பினானது. கடந்த வருடம் (2023) பிளே ஒவ் சுற்றுடன் வெளியேறிய ஜப்னா அணி, இம்முறை மீண்டும் சம்பினாகியது.

இதன் மூலம் இதுவரை நடைபெற்ற 5 தொடர்களில் 4 தடவைகள் சம்பினாகி எல்.பி.எல்லில் தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொண்டது,



# சாவகச்சேரி டச் வீதி பழநி ஆண்டவர் ஆலய ஆடி வேல் பவனி நிகழ்வுகள்

(த.சுபேசன்)

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய வேல் பவனி நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ச.பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதனும் சிறப்பு விருந்தினர்களாக இந்து கலாசார உத்தியோகத்தர் செல்வி கு.குணகீதா மற்றும் சாவகச்சேரி நகர் கிராம உத்தியோகத்தர் கு.பரமானந்தம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பழநி ஆண்டவர் முத்துச்சப்பறத்தில் ஆரோகணித்து பவனி வர அறநெறிப் பாடசாலை மாணவர்களின் காவடி ஆட்டம், கோலாட்டம், கைதடி கணேசமூர்த்தி வேட்டை உடுப்புக் குழுவினரின் மயில், புலி, குதிரை ஆட்டம் மற்றும் ஆறுகால மடம் ஜெய் சிலம்பம் விளையாட்டுக் கழகத்தினரின் சிலம்பம் மற்றும் தீப்பந்த சுழற்றல் நிகழ்வு ஆகியனவும் இடம்பெற்றன.

ஆடிவேல் பவனியானது ஆலயத்தில் இருந்து டச் வீதி, இராமலிங்கம் வீதி, கண்டி வீதி, தபாற்கந்தோர் வீதி, செருக்கல் பிள்ளையார் ஒழுங்கை ஊடாக மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது.




# வங்க வன்முறையில் பாதிப்புற்று அடைக்கலம் தேடி வருவோருக்கு கதவுகள் திறந்தே இருக்கும் என மேற்கு வங்க முதல்வர் அறிவிப்பு



வங்காளதேச வன்முறையில் பாதிக்கப்பட்டு அடைக்கலம் தேடி வருவோருக்கு கதவுகள் திறந்தே இருக்கும் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பனர்ஜி பகிரங்கமாக உறுதி கூறியிருக்கின்றார்.

இக்கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மனிதாபிமான நெருக்கடியின் போது அகதிகளுக்கு உதவ வலியுறுத்தும் ஐ.நாவின் தீர்மானத்தை மம்தா மேற்கோள் காட்டினார்.

“அகதிகளை அனுமதிப்பது உள்ளிட்ட விவகாரங்களில் முடிவெடுக்க மத்திய அரசுக்கே அதிகாரம் உள்ள நிலையில் மம்தாவுக்கு யார் அந்த அதிகாரத்தை வழங்கினார்கள்” – என்று சர்ச்சை எழுந்துள்ளது.

பாகிஸ்தானிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்காக கடந்த 1971 இல் நடந்த போரில் பங்கேற்ற வங்காளதேசத்தின் சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 30 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வந்தது. இந்த இடஒதுக்கீட்டை எதிர்த்து இளைஞர்களால் கடந்த வாரம் முதல் கடுமையான போராட்டம் முன்னெடுக்கப்பட நிலையில் போராட்டம் கலவரமாக மாறி பல வன்முறை வெறியாட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன.

இந்த வன்முறையில் 133க்கும் அதிகமான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது. போராட்டக்காரர்களை கண்டதும் சுடுவதற்கு அந்நாட்டு இராணுவத்துக்கு அரசு உத்தரவிட்டது . இந்நிலையில் இடஒதுக்கீட்டை ஆளும் ஹசீனாவின் அரசு ரத்துச் செய்துள்ளது.

இருப்பினும் போராட்டம் இன்னும் அடங்காத நிலையில் அங்கு சிக்கியுள்ள இந்திய பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் நாடு திரும்பி வருகின்றனர்.

வங்காளதேச மக்கள் இந்த போராட்டதால் ஆபத்தான விளைவுகளை சந்தித்து வரும் நிலையில் வங்கதேச எல்லையில் உள்ள மேற்கு வங்காள மாநிலத்தில் நேற்று நடந்த பேரணியில் பேசிய அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி, வன்முறையால் பாதிக்கப்பட்டு அடைக்கலம் தேடிவரும் வங்கதேச மக்களுக்கு தங்கள் மாநிலத்தில் கதவுகள் திறந்தே இருக்கும் என்று தெரிவித்துள்ளார். இதற்கு மனிதாபிமான நெருக்கடியின்போது அகதிகளுக்கு உதவ வலியுறுத்தும் ஐநாவின் தீர்மானத்தை மம்தா மேற்கோள் காட்டினார்.

இந்நிலையில் மம்தா வங்காள தேசத்தினருக்கு அடைக்கலம் தருவார் என வாக்களித்துள்ளமை மத்திய அரசை வைத்திருக்கும் பா.ஜ.கவுக்கு புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

மம்தாவுக்கு கண்டனம் தெரிவித்துள்ள மேற்கு வங்க பா.ஜ.க. துணைத் தலைவர் அமித் மாளவியா, அகதிகளை அனுமதிப்பது உள்ளிட்ட விவகாரங்களில் முடிவெடுக்க மத்திய அரசுக்கே அதிகாரம் உள்ள நிலையில் மம்தாவுக்கு யார் அந்த அதிகாரத்தை வழங்கியது என்றும் மேற்கு வங்காளம் முதல் ஜார்கண்ட் வரை வங்காளதேசத்தினரை குடியமர்த்தி தேர்தலில் வெற்றி பெற இந்தியா கூட்டணி வகுத்த சதித் திட்டம் இது என்றும் அவர் விமர்சித்துள்ளார்.



# விலகினார் ஜோ பைடன் களத்தில் கமலா ஹாரிஸ்

**வொஷிங்டன், ஜூலை 22**

அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து விலகுகின்றார் என ஜோ பைடன் நேற்று அறிவித்தார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் 5 ஆம் தேதி நடைபெற உள்ளது. இதில் குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் போட்டியிடுகிறார். இந்த சூழலில் டிரம்ப் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூடு சம்பவத்திற்கு பின்னர் கடந்த 19-ம் தேதி குடியரசு கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்றது. இதில் குடியரசு கட்சியின் அதிகாரப்பூர்வ அதிபர் வேட்பாளராக டொனால்ட் டிரம்ப் அறிவிக்கப்பட்டார்.

இந்த சூழலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக தற்போதைய அதிபர் ஜோ பைடன் மீண்டும் களம் இறங்கினார். 81 வயதாகும் நிலையில் மீண்டும் அதிபர் பதவிக்கு போட்டியிடும் நிலையில், பைடன் தொடர்ந்து பல்வேறு விமர்சனங்களை எதிர்கொண்டார். டிரம்புடன் நடந்த நேரடி விவாதத்தில் பைடன் பேசுவதற்கு மிகவும் தடுமாறினார். அதேபோல் பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை புதின் என்றும், அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை டிரம்ப் என்றும் தவறுதலாக கூறினார். இந்த சம்பவங்கள் ஜனநாயக கட்சியினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தின. மேலும் அவர் அவ்வப்போது உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு வருகிறார் என்றும் இதனால் அவர் போட்டியிட வேண்டாம் என்றும் ஜனநாயக கட்சியினர் வலியுறுத்தினர்.

இதனிடையே ஜனநாயக கட்சியின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கூட ஜோ பைடன் விலக வேண்டும் என்று கூறி இருந்தார். மேலும் ஜோ பைடனின் குடும்பத்தினரும் அவர் போட்டியில் இருந்து விலக வேண்டும் என கூறினர் எனச் சொல்லப்பட்டது. இந்த நிலையில் அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியில் இருந்து தான் விலகுகின்றார் என அதிபர் ஜோ பைடன் நேற்று அறிவித்தார். இதனால், ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் வேட்பாளராக யார் களமிறங்குவார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

இந்நிலையில் கமலா ஹாரிஸை ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதிபர் வேட்பாளராக நியமிக்க ஜோ பைடன் ஆதரவு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில், “எனது சக ஜனநாயகக் கட்சியினரே, எனது வேட்புமனுவை ஏற்க வேண்டாம். எஞ்சியிருக்கும் எனது பதவிக் காலம் முழுவதும் அதிபராக எனது கடமைகளில் எனது முழு ஆற்றலையும் செலுத்த முடிவு செய்துள்ளேன்.

2020 இல் கட்சி வேட்பாளராக எனது முதல் முடிவு கமலா ஹாரிஸைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததுதான். இது நான் எடுத்த சிறந்த முடிவு. இந்த ஆண்டு எங்கள் கட்சியின் அதிபர் வேட்பாளராக கமலா ஹாரிஸ் வருவதற்கு எனது முழு ஆதரவையும், ஒப்புதலையும் வழங்க விரும்புகிறேன். ஜனநாயகவாதிகள் – ஒன்றுகூடி டிரம்பை தோற்கடிக்க வேண்டிய நேரம் இது. இதைச் செய்வோம்” என்று அதில் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# இப்போது அமெரிக்க வரலாற்றில் வயோதிப வேட்பாளர் ட்ரம்ப்தான்!

**வொஷிங்டன்,ஜூலை 22**

78 வயது கொண்ட டொனால்ட் டிரம்ப், அமெரிக்க அதிபர் தேர்தல் வரலாற்றில் போட்டியிடும் வயது முதிர்ந்த வேட்பாளர் என்ற பெயரை இப்போது பெற்றுள்ளார்.

ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிடும் முடிவுடன் களம் இறங்கிய 81 வயதுடைய அதிபர் பைடன் அந்த முடிவிலிருந்து விலகிவிட்டார்.

இதனால், அவருக்கு அடுத்து அதிக வயது கொண்ட அதிபர் தேர்தலுக்கான வேட்பாளராக டொனால்ட் டிரம்ப் பார்க்கப்படுகிறார். பைடன் போட்டியில் இருந்து வாபஸ் பெற்ற நிலையில், 78 வயது கொண்ட டிரம்ப், அமெரிக்க அதிபர் தேர்தல் வரலாற்றில் போட்டியிடும் வயது முதிர்ந்த வேட்பாளர் என்ற பெயரை பெற்றுள்ளார்.



இதுவும் தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர் கம்ச்லா ஹாரிஸுக்கு சாதகத்தை ஏற்படுத்தும் என அக்கட்சி பார்க்கிறது. கமலா ஹாரிஸும் தீவிரத் தேர்தல் பணியைத் தொடங்கி விட்டார். வேட்பாளர் அறிவிப்பு வெளியானதும், கட்சிக்குள் ஆதரவை திரட்டும் பணியிலும் ஈடுபட்டு வருகிறார். இதனால் கட்சி உறுப்பினர்களிடையே தேர்தல் பணியாற்றுவதில் ஆர்வம் அதிகரித்துக் காணப்படுகிறது.

பக்கங்கள் 08

# கனடா முரசு

திங்கட்கிழமை 22/07/2024

## பைடனை மெச்சி ட்ரூடோ கருத்து

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மறுதேர்தலுக்கான தனது முயற்சியைக் கைவிட்டார் என்று நேற்று ஞாயிற்றுக்கிழமை 02




# மைக்ரோசாப்ட் விண்டோஸ் கணினிகள் பாதிப்பால் கனடாவிலும் பல சேவைகள் நெருக்கடியில் சிக்கின

## விமான சேவைகள் ரத்து, பல மருத்துவமனைகள் இக்கட்டில்

**உலகளாவிய தொழில்நுட்ப செயலிழப்புக்கு மத்தியில் வெள்ளிக்கிழமை டசின் கணக்கான கனேடிய விமான சேவைகள் தடைப்பட்டன. நாடு முழுவதும் உள்ள பல மருத்துவமனைகள் பாதிக்கப்பட்டன. இதனால் விமானங்கள் தரையிறங்கி தரிக்க வேண்டியதாயிற்று. உலகம் முழுவதும் உள்ள வங்கிகள் மற்றும் பிற வணிகங்கள் பாதிக்கப்பட்டன.**

மைக்ரோசாப்ட் விண்டோஸில் இயங்கும் கணினிகளில் தவறான புதுப்பித்தலுக்குப் பிறகு சிக்கல் ஏற்பட்டதாகவும், சிக்கல் தீர்க்கப்பட்டு வருவதாகவும் சைபர் செக்யூரிட்டி நிறுவனமான CrowdStrike வெள்ளிக் கிழமை கூறியது.

“இது ஒரு பாதுகாப்பு மீறல் சம்பவம் அல்லது சைபர் தாக்குதல் அல்ல” என்று அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனம் தனது இணையதளத்தில் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

“சூழ்நிலையின் தீவிரத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் சிரமத்திற்கும் இடையூறுகளுக்கும் ஆழ்ந்த வருந்துகிறோம்” என்று அது மேலும் கூறியது.

“பாதிக்கப்பட்ட அனைத்து வாடிக்கையாளர்களுடனும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். அந்த அமைப்புகள் காப்புப் பிரதி எடுக்கப்படுவதை உறுதிசெய்து, அவர்கள் தங்கள் வாடிக்கையாளர்கள் நம்பும் சேவைகளை வழங்க முடியும். - என்றும் அது மேலும் குறிப்பிட்டது.

இந்த நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு இணைய பாதுகாப்பு சேவைகளை 02



# சிறுவர் நலன்புரி கொடுப்பனவுத் தொகை இம்முறை கனடாவில் 4.7 வீத அதிகரிப்பு

கனடாவில் சிறுவர் நலன்புரி கொடுப்பனவு தொகை அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை வழங்கப்பட உள்ள சிறுவர் நலன்புரி கொடுப்பனவுத் தொகை உறுதி அளிக்கப்பட்டதனை விடவும் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆறு வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளைக்கு 7,437 டொலர்கள் வழங்கப்பட்டதுடன் ஆறு முதல் 17 வயது வரையிலான பிள்ளைக்கு 6275 டொலர்கள் வழங்கப்பட்டது.

2024 முதல் 2025 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கான கொடுப்பனவு தொடர்பிலான தகவலே தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

சிறுவர் நலன்புரித் திட்டத்தின் ஊடாக குடும்பங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.



ஆறு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கான மாதாந்த கொடுப்பனவு தொகை 648.9 டொலர்கள் எனவும், ஆறு முதல் 17 வயது வரையிலான சிறுவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுத் தொகை 547.5 டொலர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் சுமார் 350 டாலர்கள் கூடுதலாக பெற்றோர் பெற்றுக் கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதாவது கொடுப்பனவு தொகையில் 4.7 வீத அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

பண வீக்கத்தை கருத்தில் கொண்டு இந்த நலன்புரி கொடுப்பனவு தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக கனடிய சமூக அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

குறைந்த மற்றும் நடுத்தர வருமானத்தை பெற்றுக் கொள்ளும் குடும்பத்தினர் பிள்ளைகளை வளர்ப்பதில் எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை கருத்தில் கொண்டு கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் இந்த கொடுப்பனவுத் தொகை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மைக்ரோசாப்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குகிறது. வெள்ளிக்கிழமை மதியம் 12:30 மணி வரை, கனடாவில் இருந்து புறப்பட திட்டமிடப்பட்டிருந்த சுமார் 100 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன என விமானப் பகுப்பாய்வு நிறுவனமான சிரியம் தெரிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை ரத்து செய்யப்பட்ட விமானங்களில் பாதிக்கும் மேற்பட்டவை ( சுமார் 5. சேவைகள்) டொராண்டோவை தளமாகக் கொண்ட போர்ட்டர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்தவை. அது பிற்பகல் 3 மணி வரை அனைத்து விமானங்களையும் ரத்து செய்ததாகக் கூறியது.

“சிஸ்டம்கள் ஓஃவ் லைனில் இருக்கும் போது பயணிகளை மீண்டும் முன்பதிவு செய்ய முடியாது” என்று போர்ட்டர் ஏர்லைன்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

Mac மற்றும் Linux ஹோஸ்ட்கள் மூலமான கட்டனைப்புகள்பாதிக்கப்படவில்லை.

## பைடனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியான செய்திக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது பிரதிபலிப்பை வெளியிட்டார்.

பிடனை “உண்மையான நண்பர்” என்று குறிப்பிட்டார் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ.

“எனக்கு ஜனாதிபதி பிடனை பல ஆண்டுகளாகத் தெரியும். அவர் ஒரு சிறந்த மனிதர், அவர் செய்யும் அனைத்தும் அவரது தேசத்தின் மீதான அன்பினால் வழிநடத்தப்படுகின்றன” என்று எக்ஸ் தளத்தில் ஒரு இடுகையில் ட்ரூடோ தெரிவித்தார்.

“அதிபராக, அவர் கனடியர்களுக்கு ஒரு பங்குதாரர்.” - என்றும் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.






# ஒன்ராறியோவில் வேலை நிறுத்தத்தால் மூடப்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் நாளை திறக்கும்

ஒன்ராறியோவின் மதுபானக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் (LCBO) அவர்களது தொழிற்சங்கத்திற்கும் இடையே எட்டப்பட்ட புதிய ஒப்பந்தத்தை உறுதிப்படுத்தி அதற்கு ஆதரவாக இதுவரை வேலைநிறுத்தம் செய்து வந்த மதுக்கடை தொழிலாளர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வாக்களித்தனர்.

இந்த ஒப்புதல் மூலம் , மாகாண கிரவுன் கார்ப்பரேஷனில் முதன்முறையாக - கடந்த இரண்டு வாரங்களாக - நடத்தப்பட்ட வேலைநிறுத்தம் இன்று திங்கள்கிழமை நள்ளிரவுக்குப் பிறகு அதிகாரப்பூர்வமாக முடிவுக்கு வருகின்றது. வேலைநிறுத்தத்தினால் மூடப்பட்ட அனைத்து சில்லறை விற்பனைக் கடைகளையும். நாளை செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கத் திட்டமிட்டுள்ளதாக LCBO கூறுகிறது.

“புதுப்பிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தம் ஊழியர்களால் அங்கீகரிக்கப்பட்டதில் LCBO மகிழ்ச்சியடைகிறது” என்று LCBO ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒன்ராறியோ பொதுச் சேவை ஊழியர் சங்கம் (OPSEU) தனது சொந்த அறிக்கையில், வேலைநிறுத்தம் தொடங்குவதற்கு முந்தைய நாள் LCBO இன் கடைசி சலுகையுடன் ஒப்பிடும்போது புதிய, மூன்று ஆண்டு ஒப்பந்தத்தில் ‘குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள்’ உள்ளன என்று கூறியது.

OPSEU பேரம் பேசும் குழுவின் தலைவரான Colleen MacLeod, “நல்ல வேலைகள் மற்றும் பொது வருவாயைப் பாதுகாப்பதற்காக நாங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டோம், மேலும் பலன்கள் மற்றும் உத்தரவாதமான மணி நேரங்களுடன் நிரந்தர வேலைகளை வென்றெடுக்கிறோம்” என்றார்.



“எங்கள் உறுப்பினர்கள் வலுவாக நின்றனர். அவர்கள் வலுவான நிலைப்பாட்டைப் பிடித்தனர், அவர்கள் தங்கள் சமூகங்களுடன் பேசினார்கள் - அவர்கள் வெற்றி பெற்றனர்.” - என்றார் அவர்.

OPSEU ஆல் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சுமார் 10,000 LCBO தொழிலாளர்கள் ஜூலை 5 அன்று வேலையை விட்டு வெளியேறினர், இதனால் ஒன்ராறியோ முழுவதும் நூற்றுக்கணக்கான LCBO சில்லறை கடைகளை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டமை தெரிந்ததே.





# அடுத்த வாரம் வரை தணலாகக் கொதிக்கும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் பிரதேசங்கள்!

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளை தகிக்கும் நிலைக்குத் தள்ளியுள்ள சமீபத்திய வெப்ப அலைகளினால் வெப்பநிலை செல்ஸியஸ் அளவீடுகளின் முப்பதுகளின் மத்திக்கும் அதிக அளவுக்குக் கொண்டு சென்றுள்ளன.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் பிரின்ஸ் ஜார்ஜ் மற்றும் டம்ப்ளர் ரிட்ஜ் முதல் வடக்கே கியூஸ்னல் மற்றும் வில்லியம்ஸ் ஏரி வழியாக கம்லூப்ஸ், ஒகனகன் மற்றும் கூட்டெனாய் பகுதிகள் அடுத்த வாரம் வரை பெரிய அளவில் வெப்ப எச்சரிக்கையின் கீழ் உள்ளன என சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.

கிரான்புரூக், கெலோனா, நகுஸ்ப், போர்ட் ஹார்டி மற்றும் வெர்னான் ஆகிய பகுதிகள் அனைத்தும் வெள்ளிக்கிழமை உயர் வெப்பநிலை பதிவுகளை முறியடித்ததை அடுத்தும், கெலோனா 38.6 டிகிரியை எட்டியதை அடுத்தும் இந்த எச்சரிக்கைகள் வந்துள்ளன.

லிட்டன் பிரதேசம் சனிக்கிழமையன்று, அந்நாளில் கனடாவின் மிகுந்த வெப்பமான இடமாக இருந்தது. பிற்பகலில் அங்கு வெப்பநிலை 41 பாகை செல்ஸியஸை எட்டியது.

# சஸ்காட்செவன் பகுதியில் வெப்பம், புகை எச்சரிக்கை




சஸ்காட்செவன் பகுதியில் நேற்று ஞாயிறு முழுவதும் வெப்பம் மற்றும் புகை பற்றிய எச்சரிக்கையை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் கனடா அமைப்பு விடுத்திருந்தது

மேற்கு கனடாவில் எரியும் ஏராளமான காட்டுத்தீகள் காரணமாக காற்றின் தர ஆலோசனைகள் சுற்றுச்சூழல் கனடா அமைப்பால் வெளியிடப்பட்டன. மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெப்ப எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

வெப்பம் மற்றும் புகை ஆகியவற்றின் கலவையானது உடல்நல அபாயங்களை அதிகரிக்கிறது என்று சுற்றுச்சூழல் கனடா கூறுகிறது.

உடல்நல அபாயங்கள் வயதைப் பொருட்படுத்தாமல் யாரையும் பாதிக்கலாம். ஆனால் வயதானவர்கள், கர்ப்பமாக இருப்பவர்கள் மற்றும் புகைபிடிப்பவர்கள் அதிக ஆபத்தில் உள்ளனர். இப்பாதிப்பு ஏற்பட்டால் கண், மூக்கு மற்றும் தொண்டை எரிச்சல், இருமல் அல்லது மார்பு வலி போன்ற தீவிரமான ஆனால் குறைவான பொதுவான அறி குறிகளும் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.



# தைவான், திபெத், சின்ஜியாங், ஹொங்கொங் ஆகியவை சீன உள்நாட்டு விடயங்கள் என கனடாவுக்குத் தெரிவிப்பு

## இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பின் போது

பெய்ஜிங்,ஜூலை 22

தைவான், திபெத், சின்ஜியாங், ஹொங்கொங் ஆகியவை தொடர்பான விவகாரங்கள் சீன உள்நாட்டு அரசியல் சார்ந்தவை என்றும் கனடா அவற்றில் தலையிடக்கூடாது என்றும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி கூறியிருக்கின்றார்.

சீனாவும் கனடாவும் இருதரப்பு உறவுகளை வழமை நிலைக்குக் கொண்டுவருவதை ஊக்குவிக்க வேண்டும் என்றும் உத்தியோகபூர்வ பங்காளித்துவத்தை அமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, கனடிய வெளியுறவு அமைச்சரிடம் கூறியிருக்கிறார்.

“சீன-கனடிய உறவுகள் கடந்த ஆண்டுகளாக சிரமங்களையும் சிக்கல்களையும் அனுபவித்துள்ளன. ச்வற்றை சீனா பார்க்க விரும்புவதில்லை” என்று திரு வாங், கனடிய வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலியிடம் கூறினார் என சீன வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

வாங்கின் அழைப்பை ஏற்று, திருவாட்டி ஜோலி மூன்று நாள் பயணம் மேற்கொண்டு சீனா சென்றிருந்தார்.

ஏழு ஆண்டுகளில் கனடிய வெளியுறவு அமைச்சர் ஒருவர் சீனா சென்றிருப்பது இதுவே முதல் முறை.

1970ஆம் ஆண்டில் தொடங்கிய இருதரப்பு உறவுகள், 2018ஆம் ஆண்டில் ஹுவாவெய் தலைமை நிதி அதிகாரி மெங் வன்ஸொ கனடாவில் கைதானமையைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து சீனா இரண்டு கனடியர்களை சீனாவில் கைதுசெய்தது.

அவர்கள் மூவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர். இருப்பினும், கனடாவில் சீனா தலையிடுவதாக கனடா குறைகூறிவந்ததால், இருத ரப்பு உறவுகளில் விரிசல் ஏற்பட் டுள்ளது.

முன்னதாக சீன, கனடிய தலைவர்கள் 2022ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் கடைசியாகச் சந்தித்தனர்.

அப்போது, தனியார் கூட்டம் ஒன்றின் தொடர்பில் தகவல்கள் கசியப்பட்டம்சி குறித்து கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ருடோவை சீன அதிபர் ஸீ ஜின்பிங் குறைகூறினார்.

சீனாவுக்கும் கனடாவுக்கும் இடையே எந்தவொரு குறிப்பிட்ட முரண்பாடும் இல்லை என்று வாங், ஜோலி அம்மையாரிடன் கூறினார்.

இருநாடுகளுக்கும், இருநாட்டு மக்களுக்கும் இருதரப்பு உறவைக் கட்டிக்காத்து மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் சொன்னார் எனக் கூறப்பட்டது.






Image credit: Gondwana Research

# கனடா - கிரீன்லாந்து இடையே ஆய்வாளர்களினால் புதிதாகக் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ள சிறிய கண்டம்!

கனடாவுக்கும் கிரீன்லாந்துக்கும் இடையே சிறிய கண்டமொன்று (மைக்கிரோ கண்டம்) இருப்பதாக ஆய்வாளர்கள் கண்டுப்பிடித்துள்ளனர்.

கிரீன்லாந்தின் மேற்கு கடற்கரையில் உள்ள கடலில் சுமார் 400 கிமீ நீளமுள்ள கண்ட மேலோட்டத்தின் 19-24 கிலோமீட்டர் தடிமன் கொண்ட பகுதியை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது டேவிஸ் ஜலசந்தி ப்ரோட்டோ-மைக்ரோ கண்டம் என்று அழைக்கப்படுகிறது.

கனடாவிற்கும் கிரீன்லாந்திற்கும் இடையிலான ஆரம்ப பிளவு சுமார் 118 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பமாகியுள்ளது.

சுமார் 58 முதல் 49 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, கனடாவிற்கும் கிரீன்லாந்திற்கும் இடையில் பரவியிருந்த கடற்பரப்பு வடகிழக்கு-தென் மேற்கிலிருந்து வடக்கு-தெற்காக மாறியதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தற்போது இந்த புதிய கண்டம் முதன்முறையாக சுவீடனின் உப்சாலா பல்கலைக்கழகம் மற்றும் பிரிட்டனின் டெர்பி பல்கலைக்கழகம் ஆகியவற்றின் புவியியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

இங்குள்ள டெக்டோனிக் தட்டு அசைவுகளை விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்து கொண்டிருந்த போது, இந்த பகுதியில் 402 கி.மீ நீளம் கொண்ட சிறிய கண்டம் இருப்பது தெரிய வந்துள்ளது. இந்தக் கண்டம் சுமார் 6 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவானது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.





# வெளிநாட்டு மாணவர்கள் தொடர்பில் கனடாவின் அணுகுமுறை மாற்றங்கள்

கனடாவில் இருக்கும் சர்வதேச மாணவர்கள் அங்கு நிரந்தரமாகத் தங்கள் எதிர்காலத்தை அமைத்துக் கொள்வது சவாலாகி வருவதாகக் கூறி அங்கு சமீபத்தில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்த ஆண்டில், கனடா அரசு எடுத்துள்ள நான்கு முடிவுகள் இந்தியா உட்பட பல லட்ச சர்வதேச மாணவர்களின் கனடா கனவுக்கு சவாலாக மாறியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமைத் துறை அமைச்சர் மார்க் மில்லர், "கனடாவால் எதிர்காலத்தில் சர்வதேச மாணவர்களைத் திறந்த மனதுடன் வரவேற்க முடியாது," என்று தெரிவித்துள்ளார்.

இளைஞர் ஆதரவு ஒருங்கிணைப்பு அமைப்பு ஒன்று கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சர் மார்க் மில்லரை டேக் செய்து, கனடாவின் பொருளாதாரத்திற்கு சர்வதேச மாணவர்களின் பங்களிப்பு, கோவிட் பேரிடரின் போது அவர்கள் செய்த பணிகள், கனடிய அரசாங்கத்தின் வாக்குறுதிகள் போன்றவற்றைக் குறிப்பிட்டு ட்வீட் செய்திருந்தது. அதிக சர்வதேச மாணவர்களை அழைத்துக் கொள்வது குறித்த கனடாவின் வாக்குறுதியையும் அதில் குறிப்பிட்டிருந்தது.

இதற்கு பதிலளிக்கும் வகையில்தான் அமைச்சர் மார்க் மில்லர் தனது எக்ஸ் பக்கத்தில் மேற்குறிப்பிட்ட வாதத்தை முன்வைத்துள்ளார்.

அவர்களுக்கு அளித்த பதிலில் அவர் மேலும், "மக்கள் இங்கு வந்து கல்வி கற்பதோடு, இங்கிருந்து திறமைகளை எடுத்துக்கொண்டு தங்கள் நாடுகளுக்குச் செல்கின்றனர்" என்றும் மார்க் மில்லர் குறிப்பிட்டார்.

கனடிய அரசின் சமீபத்திய முடிவுகள் குறித்த விவாதம் புதிதல்ல. இதன் காரணமாக சர்வதேச மாணவர்கள் பலரும் வீதிகளில் இறங்கிப் போராடவும் தொடங்கியுள்ளனர்.

டொரன்டோ, வின்னிபெக், பிரிட்டிஷ் கொலம்பியா, பிரின்ஸ் எட்வர்ட் தீவு உள்பட பல பகுதிகளில் சர்வதேச மாணவர்களால் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**படிப்புக்கேற்ற வேலை கிடைக்க வேண்டும்**

கனடாவில் படித்த பிறகு, சர்வதேச மாணவர்கள் மூன்று ஆண்டுகாலம் அங்கு வேலை செய்வதற்கான பணி அனுமதியைப் பெறுகிறார்கள். இதன்போது மாணவர்கள் நிரந்தரக் குடியுரிமை பெறுவதற்கும் விண்ணப்பிக்கிறார்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் சர்வதேச மாணவர்களுக்கும் கனடிய குடியுரிமை வழங்கப்பட்டது.

இந்த மூன்று ஆண்டுகள் பணி அனுமதி கோவிட் காலத்தில் மேலும் 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

ஆனால், தற்போது கனடா அரசு, முதுகலை பட்டப்படிப்பு முடிப்பவர்களுக்கு அவர்களின் பணி அனுமதி காலத்தை நீட்டிக்க மறுத்துள்ளது. மேலும், அந்த மாணவர்களுக்கு நிரந்தரக் குடியுரிமை கொடுப்பது குறித்தும் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இதன் காரணமாகப் பல சர்வதேச மாணவர்கள் தங்கள் நாடுகளுக்கே திருப்பி அனுப்பப்படும் நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

கனடிய ஊடகச் செய்திகளின்படி, அங்குள்ள தொழிலாளர் சந்தையில் இருக்கும் தேவைகளின்படி, சர்வதேச மாணவர்களில் யார் படிப்பை முடித்த பிறகு தங்கியிருக்க வேண்டும், யாரைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்பதை அதிகாரிகள் இப்போது ஆராய்ந்து வருகின்றனர்.

"குடியுரிமை பெறுவதற்காகவே ஏதாவதொரு டிப்ளமோ படிப்பைத் தேர்ந்தெடுத்து மாணவர் விசாவில் வந்தவர்கள், படிப்புக்கேற்ற வேலை கிடைக்காமல் இருக்கின்றனர். இதனால், ஒருவரது படிப்புக்கேற்ற வேலை கிடைப்பதை உறுதி செய்யவே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது," என்கிறார் குடியேற்றங்களுக்கான வழக்கறிஞர் நடராஜன் ஸ்ரீராம்.

அவரது கூற்றுப்படி, குடியுரிமை பெறுவதற்காக தொழில் திறன்களுடன் தொடர்பில்லாத ஏதாவதொரு டிப்ளமோ படிப்பைத் தேர்ந்தெடுத்து கனடாவுக்கு வந்து, பிறகு படிப்புடன் தொடர்பில்லாத பணிகளைச் செய்பவர்களுக்கு பணி அனுமதியை நீட்டிக்க கனடிய அரசு விரும்பவில்லை.

ஃபினான்ஷியல் போஸ்ட் நாளிதழுக்கு சமீபத்தில் அளித்த பேட்டியின்போது, கனடாவின் குடிவரவு, அகதிகள், மற்றும் குடியுரிமைத் துறையின் அமைச்சர் மார்க் மில்லர், சர்வதேச மாணவர்கள் தங்கள் கல்வி மற்றும் பயிற்சிகளுக்கு ஏற்ற வேலைகளைத் தேட வேண்டும் என்று கூறியுள்ளார்.

மார்க் மில்லரின் கூற்றுப்படி, சமீப காலமாக முதுகலை பட்டப்படிப்பு முடித்து பணி அனுமதி பெற்றவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது.

அரசாங்கத் தரவுகளின்படி, 2022-இல் கனடாவில் முதுகலைப் படிப்பு முடித்து பணி அனுமதி பெற்றவர்கள் 1.3 லட்சம் பேர் இருந்தனர். இது நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட 78 வீதம் அதிகம்.

இதைத்தொடர்ந்து கனடா அரசு கடந்த சில மாதங்களாகப் பல விதிமுறைகளை மாற்றியுள்ளது. இது கனடாவுக்குப் படிக்கச் செல்வதை சர்வதேச மாணவர்களுக்குக் கடினமாக்கியுள்ளதோடு, அங்கு குடியுரிமை பெறுவதையும் முன்பைவிடக் கடினமாக்கிவிட்டது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அங்கு அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, வீடு பற்றாக்குறை மற்றும் வேலை வாய்ப்புகள் இல்லாதமை ஆகிய வற்றால் பல விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறார்.

தொடர்ச்சி▼



# வெளிநாட்டு மாணவர்கள் தொடர்பில் கனடாவின் அணுகுமுறை மாற்றங்கள்

தொடர்ச்சி▲

இந்தப் பிரச்னைகளைக் கருத்தில் கொண்டு சர்வதேச மாணவர்களின் படிப்பு மற்றும் பணி அனுமதியை கனடா குறைத்திருந்தது.

கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை அதிகமாக இருந்த நிலையில், இந்த ஆண்டு மூன்று லட்சம் சர்வதேச மாணவர்களுக்கு மட்டுமே படிப்பு மற்றும் பணிக்கான அனுமதியை வழங்குவதாகக் கனடா கூறியுள்ளது.

### முதுகலைப் படிப்பு மற்றும் பணி அனுமதி

கனடா அரசாங்கத்தால் மாற்றப்பட்டுள்ள விதிகளில் முக்கியமான ஒன்று, முதுகலைப் படிப்பு மற்றும் பணி செய்வதற்கான அனுமதி தொடர்புடையது. இது 'வொர்க் பெர்மிட்' என்று அழைக்கப்படுகிறது.

கனடாவில் இரண்டு ஆண்டுகள் படிப்பைத் தொடரும் ஒருவர், அதற்குப் பிறகு மூன்று ஆண்டுகள் பணி செய்வதற்கான அனுமதியைப் பெறுவார்.

கோவிட் பேரிடர்க் காலத்தில், தொழிலாளர் சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, கனடா அரசு இந்தப் பணி அனுமதியைக் கூடுதலாக 18 மாதங்களுக்குத் தற்காலிகமாக நீட்டிக்கும் கொள்கையை அமல்படுத்தியது.

இந்நிலையில், தற்போது அந்தப் பணி அனுமதி காலத்தை நீட்டிக்கக் கூடாது என்று கனடா அரசு முடிவெடுத்துள்ளது.

### உத்தரவாத முதலீட்டுச் சான்றிதழ் தொகை அதிகரிப்பு

படிப்பு விசாவில் கனடாவுக்கு செல்லும் மாணவர்களிடம் வசூலிக்கப்படும் தங்குமிடச் செலவு ஜி.ஐ.சி (GIC) எனப்படுகிறது. அதாவது, உத்தரவாத முதலீட்டுச் சான்றிதழ்.

இந்த ஜி.ஐ.சி தொகையில் மாணவர்களின் கல்விக்கான டியூஷன் ஃபீஸ் எனப்படும் தொகையும் அடக்கம். இது கிட்டத்தட்ட நிலையான வைப்புத் தொகையைப் போன்றதே. ஆனால், இது தவணை முறையில் மாணவர்களுக்குத் திருப்பிச் செலுத்தப்படும்.

இந்தத் தொகையை கனடா அரசு சில மாதங்களுக்கு முன்பு அதிகரித்தது. ஜி.ஐ.சி தொடர்பான புதிய விதிகள் 2024-ஆம் ஆண்டு, ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

அதன்படி, மாணவர்கள் 20,635 கனடிய டாலர்கள் செலுத்த வேண்டும். முன்னதாக இந்தத் தொகை 10,000 கனடிய டாலர்களாக இருந்தது.

இதுகுறித்துப் பேசிய கனடிய குடியேற்றம் தொடர்பான CANext நிறுவனத்தின் தலைமைச் செயல் அதி காரியும் குடியேற்றங்கள் தொடர்பான வழக்கறிஞருமான நடராஜன் ஸ்ரீராம், "இந்தத் தொகை கிட்டத்தட்ட கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக உயர்த்தப்படாமலேயே இருந்தது. இந்த நிலையில், தற்போதுள்ள விலைவாசி உயர்வு, வீடு பற்றாக்குறை போன்ற பல அம்சங்களைக் கருத்தில் கொண்டு கனடிய அரசு இந்தத் தொகையை உயர்த்தியுள்ளது," என்று கூறினார்.

### வாழ்க்கைத் துணைக்கான விசா மாற்றங்கள்

கணவன்/மனைவியின் விசா தொடர்பான விதிகளிலும் கனடா அரசு சில மாற்றங்களைச் செய்துள்ளது. இனி, அங்கு முதுநிலை அல்லது முனைவர் பட்டப்படிப்பில் படிக்கும் சர்வதேச மாணவர்களுக்கு மட்டுமே தங்களது வாழ்க்கைத் துணையை அழைத்து வருவதற்கான விசா வழங்கப்படும்.

அதற்கு அடுத்த படிநிலைகளில் உள்ள படிப்புகளைப் படிக்கும் மாணவர்கள் தங்கள் கணவன் அல்லது மனைவியை வாழ்க்கைத் துணை விசாவில் கனடாவிற்கு அழைத்து வர முடியாது.

"முன்பு, டிப்ளமோ படிப்புகளில் படித்த சர்வதேச மாணவர்களும்கூட தங்கள் மனைவிகளை அழைத்து வரலாம். ஆனால், இனி அப்படிச் செய்ய முடியாது," என்கிறார் நடராஜன் ஸ்ரீராம்.

வாழ்க்கைத் துணை விசா என்பது ஒரு வகையான சார்பு விசா. வெளிநாட்டில் வசிப்பவர்கள் தங்கள் குடும்பத்தை உடன் அழைத்து வந்து வைத்துக்கொள்ள இதைப் பயன்படுத்துகின்றனர்.

### வேலை நேரம் குறைப்பு

சர்வதேச மாணவர்கள் படிக்கும் நேரம் போக, வேலை செய்வதற்கான பணி நேரத்தை கனடா அரசு குறைத்துள்ளது.

அரசாங்கத்தின் தற்போதைய விதிகளின்படி, மாணவர்கள் ஒரு வாரத்தில் அதிகபட்சமாக 24 மணிநேரம் வரை வேலை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

அவர்கள் முதன்மையாகப் படிப்பில் கவனம் செலுத்துவதையும், தேவைப்படும் போது மட்டுமே வேலை செய்வதையும் உறுதிசெய்ய இந்த முயற்சியை எடுத்துள்ளதாக அரசு கூறுகிறது.

முன்பு மாணவர்கள் படிப்பு போக ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 8 மணிநேரம் வரை வேலை செய்யலாம் என்ற வகையில் இருந்தது. ஆனால், 2023-ஆம் ஆண்டு, டிசம்பர் 31-ஆம் திகதி வரை இருந்த இந்த விதி மாற்றப்பட்டு, தற்போது வாரத்திற்கே அதிகபட்சம் 24 மணிநேரம் வரை மட்டுமே மாணவர்களின் பணிநேரம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 8 மணிநேரம் வரை வேலை செய்யலாம் என்ற விதி கோவிட் காலத்தில் தற்காலிகமாகக் கொண்டு வரப்பட்டது என்கிறார் குடியேற்றங்களுக்கான வழக்கறிஞர் நடராஜன் ஸ்ரீராம்.

கோவிட் பேரிடருக்கு முன்பு, மாணவர்கள் ஒரு வாரத்தில் 20 மணிநேரம் வரை வேலை செய்யலாம் என்ற விதி இருந்தது. "கோவிட் காலத்தில் சந்தை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த விதி தளர்த்தப்பட்டு, மாணவர்கள் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் வரை வேலை செய்யலாம் என்ற விதி அமல்படுத்தப்பட்டது," என்கிறார்.

இந்நிலையில், தற்போது இந்தத் தற்காலிகப் பணி நேரத்தை மாற்றியமைத்து 'முன்பு இருந்ததைவிட 4 மணிநேரம் உயர்த்தி 24 மணிநேரம் வரை பகுதிநேரம் வேலைகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு' கனடிய அரசு அனுமதி அளித்துள்ளதாகக் கூறுகிறார் நடராஜன் ஸ்ரீராம்.

"மாணவர் விசாவில் வருவோரின் கவனம் முழுக்கக் கல்வியில் இருக்க வேண்டும் என்பதே கனடிய அரசின் நோக்கம்" என்று கூறுகிறார் அவர்.

(நன்றி: பி.பி.ஸி. தமிழ்)